# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com
Website:www.bankubeutn.in


சுற்றறிக்கை எண்:147:2016 நாள்: 20.06.2016

அன்பார்ந்த தோழர்களே,

- **அகில இந்திய வங்கித்துறை வேலைநிறுத்தம் !**
- **ஜூலை 13, 2016 - ஒரு நாள் வேலைநிறுத்தம் !!**
- **AIBEA-AIBOA அறைகூவல் !!!**

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அரசின் வங்கித்துறை சீர்திருத்தங்களுக்கு எதிராக மே 25, 2016 ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. பிற சங்கங்களும் அந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ள முன்வந்ததன் காரணமாக அந்த வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டது. வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் (United Forum of Bank Unions - UFBU) கூட்டம் கடந்த 11.05.2016 அன்று ஹைதராபாத் நகரில் நடைபெற்றது. அரசு வங்கித்துறையில் மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்கள், ஊழியர் நலன்களுக்கு எதிரான செயல்பாடுகள், தொழிலாளர் சட்டங்களில் மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்ட வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, ஜூலை 29, 2016 அன்று ஒரு நாள் அகில இந்திய வேலை-நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது. **இந்த வேலைநிறுத்தம் குறித்து பின்னர் தெரிவிக்கப்படும்.**

இந்த நிலையில், அதிரடியாக மத்திய அரசு, பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளை, பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கும் முடிவை அறிவித்துள்ளது. இந்தப் பின்னணியில், AIBEA-AIBOA அமைப்புகள் விவாதித்து உடனடியாக வரும் 20.06.2016 அன்று எல்லா ஊர்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்றும், 30.06.2016 அன்று மாநில தலை நகரங்களில் தர்ணா நடத்துவது என்றும், 12.07.2016 அன்று பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளான, ஸ்டேட் பாங்க் ஆப் பிகானிர் அண்டு ஜெய்பூர், ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத், ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா, ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் ஆகிய வங்கிகளில் வேலைநிறுத்தம் நடத்துவது என்றும், 13.07.2016 அன்று அகில இந்திய வேலைநிறுத்தம் நடத்துவது என்றும் முடிவுசெய்துள்ளது.

நமது தோழர்கள் அனைவரும், வழக்கம்போல, உணர்வுப்பூர்வமாக வரும் **13.07.2016 அன்று நடைபெறவுள்ள வேலைநிறுத்தத்திலும்**, அது தொடர்பாக

நடைபெறவுள்ள பேரணிகள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டு யூனியன் வங்கியில் இந்த வேலைநிறுத்தத்தை முழுமையாக வெற்றிபெறச்செய்திட வேண்டுகிறோம்.

## <u>மத்திய நிதி அமைச்சருடன் சந்திப்பு</u>

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள் 18.06.2016 அன்று மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து வங்கித்துறையிலுள்ள முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதித்தனர்.

பொதுத்துறை வங்கிகள் இணைப்பு தேவையற்ற ஒன்று என்றும், தற்போதைய உடனடி தேவை வாராக்கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுப்பதே என்றும் சங்கங்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், நிதியமைச்சர் வங்கிகளை பலப்படுத்தவும், பன்னாட்டு வங்கிகளுக்கு இணையாக இந்திய வங்கிகளை உருவாக்கவும் இந்த இணைப்பு தேவையாக உள்ளதாகவும் தெரிவித்ததை சங்கங்கள் ஏற்கவில்லை.

பல வங்கிகளில் நட்டம் ஏற்பட்டுள்ளதால், அங்குள்ள ஊழியர் நல திட்டங்கள் முடக்கப்படும் அபாயம் உள்ளதால், நிதியமைச்சர் தலையிட்டு அத்திட்டங்கள் தொடர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை பரிசீலிப்பதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

பல வங்கிகளில் ஊழியர் இயக்குனர்கள் நியமிக்கப்படாதது குறித்து நிதியமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. அதனை விரைவுபடுத்துவதாக நிதியமைச்சர் உறுதி அளித்தார்.

வடகிழக்கு மாநிலங்களில் பணியாற்றும் பிற மாநிலங்களைச் சார்ந்த வங்கி அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் மத்திய அரசு, ரிசர்வ் வங்கி ஆகியவற்றிற்கு இணையாக ஊக்கத்தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிப்பதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

நிதியமைச்சருடன் நடைபெற்ற சந்திப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இல்லாத காரணத்தினால் வரும் 13.07.2016 அன்று வேலைநிறுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**